# பால்வண்ணப்பிள்ளை சிறுகதையில் ஆணாதிக்கம்

***வே. ராஜ்குமார்***
இரண்டாமாண்டு முதுகலைபட்ட மாணவன், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783639

**ஆய்வுச்சுருக்கம்**

*பால்வண்ணப்பிள்ளை சிறுகதை பால்வண்ணப்பிள்ளை என்ற ஆணாதிக்கவாதியை மையமாக கொண்டுபின்னப்பட்டுள்ளது. இதில்தான்பிடித்தமுயலுக்குமூன்றுகால்கள்என்றுநினைத்துசெய்யும் ஓவ்வொரு செயலும் அறிவுக்கு பொருந்தாத செயலாகும். பிடிவாத குணத்தால் ஒரு பயனும் அடைய முடியாது. ஆணாதிக்கம் என்ற போர்வைக்குள் ஓரு பெண் சந்திக்கும் பிரச்சனைகளைப் பற்றி புதுமைப்பித்தன் அலங்கரித்துள்ளார். அந்த வகையில் பிடிவாத குணத்தையும் ஆணாதிக்க செயலைப் பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.*
***கலைச்சொற்கள்:*** *புதுமைப்பித்தன், ஆணாதிக்கம், பெண்ணடிமை, போகப்பொருள்.*

**முன்னுரை**

*கணவன் என்ற உறவு பெண்ணுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஏனென்றொல் ஒரு பெண் தனது தாய் தந்தையரை விட்டு தான் வாழ்ந்த இடத்தையும் விட்டு, பழைய சொந்த பந்தங்களையும் விட்டு நமக்காக நம்மை நாடி வாழ்கிறாள். இப்படி அற்புத படைப்பை றெ்றவள் தான் பெண். அந்த கணவன் தனது மனைவியை யாரிடமும் விட்டுக் கொடுக்காமல் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். அன்பும் அறனுமாய் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு நேர் மாறாக கணவன் என்ற உறவு இருந்தால் வாழ்க்கை என்றும் இன்பரசம் சுவையிழந்து போய் விடும். இந்த செயல்முறையை புதுமைப்பித்தன் பால்வண்ணம் பிள்ளை என்னும் கதையில் திறம்பட விளக்குகிறார். ஆணாதிக்க பிடிவாதத்தால் அந்த குடும்பத்தில் ஏற்படும் அவல நிலையையும், துன்பநிலையையும் பற்றி ஆராய்வதே இந்த ஆய்வு நோக்கமாகும்.*

**புதுமைப்பித்தனின் சிறுகதைகள்**

*மனிதனின் எண்ணத்தை படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடிதான் இலக்கியம். இதில் காப்பியங்கள், புதினம், புதுக்கவிதை, மரபுக்கவிதை என பலவகை உள்ளது. அதில் ஒன்றுதான் "சிறுகதை". இச்சிறுகதையானது ஒருவரை பற்றி இரண்டே பக்கங்களில் திறம்படக் கூறுவது ஆகும். இந்த வகையில் புதுமைப்பித்தனின் சிறுகதைகள் பொழுது போக்குப் புனைவு வகையைச் சேர்ந்தவை அல்ல. அவை ஒவ்வொன்றும் சமுதாயப் பிரச்சனைகளை முன்னுறுத்தி கருத்தாக்கமாக எழுதப்பட்டிருக்கிறது*[1]

**பால்வண்ணப்பிள்ளையின் கதை சுருக்கம்**

*பால்வண்ணப்பிள்ளை கலெக்டர் ஆபிசில் ஒரு குமஸ்தா ஆவார். அவர் அங்கு அனைவருக்கும் தாழ்ந்தும் பணிந்தும் இருக்க வேண்டிய நிர்பந்தம் ஆகும். அங்கு ஏற்படும் கோபத்தினை தன் மனைவியிடமும் குழந்தையிடமும் காட்டுகிறார். வெளிச் சமுகத்தில் ஏற்படும் இன்னல்களுக்கு தன் குடும்பத்தில் எல்லை மீறி தன் ஆணாதிக்கத்தை வெளிப்படுத்துகிறார். இந்த முறையில் தன்னை நம்பி இருக்கும் மனைவியையும், குழந்தைகளையும் வார்த்தைகளாலும் சில நேரங்களில் பேசாமல் மௌனத்தினாலும் துன்பப்படுத்துகிறார்.*

**வீட்டில் புலி வெளியில் பசு தன்மைக் கொண்ட பால்வண்ணம் பிள்ளை**

ஒருவர் எல்லோரிடமும் ஒரே மனநிலையில் நடந்துக் கொள்ளும் தன்மைக் கொண்டவராக இருப்பதில்லை. ஒரு சிலரிடம் முக மலர்ச்சியுடனும் ஒரு சிலரிடம் கடுகு பொரிவது போல் வெறுப்புத் தன்மை கொண்டும் நடந்துக் கொள்வார்கள். இதே போல் தான் பால் வண்ணப்பிள்ளை அலுவலகத்தில் பசுக்குணம் கொண்டவனாக அமைதியாகவும் வீட்டில் அதற்கு நேர்மாறாக மனைவி பிள்ளைகளிடம் புலித்தன்மைக் கொண்டவனாக இருக்கிறார். இதனை ஆசிரியர்,

**"பால் வண்ணம் பிள்ளை ஆபிசில் பசு வீட்டில் ஹிட்லர்"** (பா.பிள்ளை.ப.1)

என்ற வரிகளில் நமக்கு உணர்த்துகிறார்.

**ஆணாதிக்கவாதிகள் பெண்களை நடமாடும் இயந்திரமகத்தான் கருதிகிறார்**

பெண்ணானவள் இன்று எல்லாத் துறைகளிலும் சென்று ஆணுக்கு நிகராக இருக்கிறார்கள். ஆனால் ஒரு சில இடங்களில் பெண்ணை ஒரு போகப் பொருளாகவும், குழந்தை பெற்றெடுக்கும் கருவியாக தான் பார்க்கிறார்கள். பால்வண்ணப் பிள்ளையின் மனைவி உடல் மெலிந்து நான்கு குழந்தைகளுக்கு தாயாக மட்டுமே உள்ளாரே தவிர எந்த விதமான உரிமையும், மகிழ்ச்சியும் இல்லாமல் வாழ்கிறாள் என்பதை,

**"பால் வண்ணம் பிள்ளைக்கும் அவருடைய மனைவி யாருக்கும் கர்ப்பத் தடையில் நம்பிக்கை கிடையாது. அதன் விளைவு வருஷம் தவறாகது ஒரு குழந்தை. தற்பொழுது பால்வண்ண சந்ததி நான்காவது எண்ணிக்கை"**

(பா.பிள்ளை.ப.1)

என்ற வரிகளில் குழந்தையை பெற்றெடுக்கும் கருவிப்பொருளாக இருக்கிறாள் என்பதை கூறுகிறார்.

**"இந்தாங்க ஒங்ககிட்ட ஒன்று சொல்லணமே! இந்தப் பிள்ளைகளுக்குப் பால் செலவு சாஸ்திய இருக்கே! ஒரு மாட்டெ பத்து நூறு குடுத்துப் டிச்சிப்புட்டா என்ன? என்றாள் இங்க வர வேண்டியதுதான், ஒரே இராமாயணம் மாடு கீடு வாங்க முடீயாது. எம் புள்ளெய நீத்தண்ணியை குடிச்சு வளரும் என்று சொல்லி விட்டார்'**

(பா.பிள்ளை.ப.2)

என்ற வரிகளில் அவளுக்கான உரிமை மறுக்கப்படுகிறது என்பதை கூறுகிறார்.

**உண்ணதமான தாய்மை**

ஒரு குழந்தையை பெற்றுவிட்டால் மட்டும் ஒரு பெண் தாயாக முடியாது. அந்த குழந்தைக்கு தேவையான உணவும், உடையும் அளித்து அவர்களுக்கு வேண்டியதையும் செய்து பாதுகாக்க வேண்டும். அன்பினைக் காட்டி வளர்க்க வேண்டும். அப்படி செய்தால் தான் உண்மையான தாய்மை பண்பு ஆகும் . இதனை பொன்முடியார்,

**ஈன்று புறத்தருதல் என்தலைக் கடனே[2]**

என்று குழந்தைகளின் வளர்ச்சியைப் பற்றி ஒற்றை வரியில் கூறுகிறார். இந்த வரிகளுக்கு ஏற்றார் போல் பால்வண்ணப்பிள்ளை மனைவி இருக்கிறாள் என்பதை,

**"அவர் மனைவியின் கையில் இரண்டு கெட்டிக் காப்பு இருந்தது. அவளுக்கு குழந்தையின் மீதிருந்த பாசத்தினால் அந்த காப்பு மயிலைப் பசுவும் கன்று குட்டியுமாக மாறின"**

(பா.பிள்ளை.ப.2.)

என்று உணர்வுபூர்வமாக உணர்த்துகிறார்.

நான்கு குழந்தைகளுக்கு பால் வாங்கி கொடுக்க முடியாத சூழ்நிலையில் குழந்தை பசியினை போக்குவதற்கு அந்த தாய் தன் காப்பினை விற்று பால் மாட்டினை வாங்கினாள். குழந்தையின் பசி தீர்ந்தது. அது தாய்மையின் உண்ணத அறச் செயலாகும்.

**பிடிவாத குணம் அறிவை மழுங்கச் செய்யும்**

பிடிவாதம் என்ற குணம் தன் அறிவினை மழுங்கடிக்கச் செய்யும் குணம் ஆகும். காரணம் தான் நினைத்தது நடத்தியே தீர வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. இந்த பிடிவாத குணத்தால் தீமைகளே பெரும்பாலும் நடக்கிறது. இந்தப்பிடிவாத குணம் அறிவிலார் செயல்முறையாகும்.

*அறிவுடையோர் எல்லா நன்மையுமே உடையவர் ஆவர். அறிவில்லாதவர் எதனை உடையவரானாலும் எந்த நன்மையும் இல்லாதவரே ஆவர்*[3]

என்று புலியூர்கேசிகன் வள்ளுவன் குறளுக்கு விளக்கம் தருகிறார். அறிவில்லாத செயலை பால்வண்ணப்பிள்ளை செய்கிறார். அதனால் அவருக்கு எந்த பயனும் இல்லை. நன்மையும் இல்லை என்பதை,

***"அன்று இரவு எட்டு மணி இருக்கும். பால்வண்ணம் பிள்ளையும் சுப்புக் கோணாரும் வீட்டினுள் நுழைந்தார்கள்.***
***மாட்டைப்பாரும் இருபத்தஞ்சி ரூபாய் என்றார். சாமி மாடு அறுபது ரூபாய் பெறுமே என்றார் சுப்புக்கோனார். இருபத்தைந்து தான். உனக்காக முப்பது ரூபாய் என்ன? இப்பொழுதே பிடித்துக் கொண்டு போக வேண்டும்.***
***சாமி ராத்திரியிலா? நாளைக்கு விடியன்னே பிடிச்சிக்கிறேன்! என்றார் சுப்புக்கோனார்.***
***உம் இப்பவே***
***மாட்டையவிழ்த்தாய் விட்டது***
***மனைவி மாடு எழுபது ரூபாயாயிற்றே குழந்தைகளுக்குப் பாலாயிற்றே என்று தடுத்தாள். மேலும் வரும்படி வேறு வருகிறதாம்.***
***என் புள்ளைகள் நீத்தண்ணி குடிச்சி வளர்ந்துக்கிடும் என்றார் பிள்ளை"*** *(பா.பிள்ளை.ப.3,4)*

தன் பிடிவாத குணத்தால் அறிவினை இழந்தார். அதனால் அவருக்கு எந்தவித பயனும் கிடைக்கவில்லை. தன் ஆணாதிக்க செயல்திறத்தால் ஒரு நன்மையும் அமையவில்லை.

## முடிவுரை

ஆணுக்கு நிகர் பெண் என்று சட்டம் சொல்கிறது. ஆனால் ஒரு சில இடங்களில் பூத்திருக்கும் மென்மைத் தன்மைக் கொண்ட மலரைப் போன்றவள் பெண். இந்த மலரைப் போன்றவளை ஆணாதிக்கம் என்ற நெருப்பால் வாட்டுவது மிக கொடியதாகும். பிடிவாத குணத்தால் குடும்பத்தில் ஏற்படுவது பிரச்சனைகளே என்று பால் வண்ணபிள்ளை நமக்கு உணர்த்துகிறது.

## சான்றென் விளக்கம்

1. https://ta.m.wikipedia.org.
2. புலியூர்கேசிகன், புறநானூறு, ப.300.
3. புலியூர்கேசிகன், திருக்குறள், ப.92.

## துணை நூற்பட்டியல்

1. புலியூர்கேசிகன்- புறநானூறு, முத்தமிழ் பதிப்பகம், 9அ, மேக்மில்லன் காலனி நங்கை நல்லூர், சென்னை - 600 001.
2. புலியூர்கேசிகன் - திருக்குறள், பூம்பூகார் பதிப்பகம், 127, பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை - 600 108.